ஆக 'சேர்மென் ஆஃப் தி போர்டு'-க்கு டிஸ்க்ரீஷன் பவர் கொடுக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக பம்புசெட்டை எடுத்துக்கொண்டால் சாதாரண விவசாயிக்கு ஒரு மாதம் 100 ரூபாய் அல்லது 50, 60 ரூபாய் வரும். இதற்கெல்லாம் சேர்மென்-ஐப் போய்ப் பார்க்க முடியாது. ஆகவே இதிலுள்ள பலாபலன்கள் எல்லாம் பெரும்பெரும் முதலாளிகளுக்குத்தான் போய்ச்சேரும். இந்த மாதிரியான டிஸ்க்ரீஷன் பவர் இருக்கவேண்டுமா என்பதைப்பற்றியெல்லாம் பரிசீலனை செய்வதற்கு, இந்தச் சட்டத்தை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, இந்தச் சட்ட முன்வடிவின் மீதுள்ள விவாதம் தொடர்ந்து 3-4-1978 திங்கட் கிழமை நடைபெறும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 3-4-1978 திங்கட்கிழமை காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-45-க்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

இல்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

*200. தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1978).

*201. தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, நகர்ப்புற நில (உச்சவரம்பு கட்டுதல், முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1978).

202. 27-8-1969 ஆம் தேதியன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றிய தீர்மானத்திற்கிணங்க, 31-3-1977 ஆம் தேதி அன்று உள்ளவாறு கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களது சொத்திருப்புக்கள் பற்றிய விவரக் கணக்குகள் பேரவை முன் வைக்கப்பெற்றன.

1. திரு. சோ. அழகர்சாமி.
2. திரு. வீ. சின்னையா.
3. திரு. ரா. கு. பெருமாள்.

203. 1972-73 ஆம் ஆண்டிற்கான இந்திய தணிக்கைத் துறைத்தலைவரின் அறிக்கை (வருவாய் வரவினங்கள்) குறித்த பொதுக்கணக்குக் குழுவின் முதலாவது அறிக்கை (ஆறாவது பேரவை) (ஆங்கிலம், தமிழ்.)

204. 1972-73-ஆம் ஆண்டிற்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் முன்னறிக்கைமீதான, பொதுக் கணக்குக் குழுவின் இரண்டாவது அறிக்கை (ஆறாவது பேரவை) (ஆங்கிலம், தமிழ்).

205. 1972-73 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப்பெற்ற மானியக் கோரிக்கைகளுக்கும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் கூடுதலாகச் செலவழித்த தொகைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் மூன்றாவது அறிக்கை (ஆறாவது பேரவை) (ஆங்கிலம், தமிழ்).

---

* 30-3-1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.